## திருக்குறள் - அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை

### அதிகாரம்: புறங்கூறாமை

**குறள் 181:**

**அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுதல் நல்லது.

**குறள் 182:**

**அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச் செய்வதை விட, ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.

**குறள் 183:**

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூற்றும் ஆக்கத் தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர் வாழ்தலை விட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல், அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.

**குறள் 184:**

**கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்னின்று பின்நோக்காச் சொல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

**குறள் 185:**

**அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்**
**புன்மையாற் காணப் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாததன்மை, ஒருவன் மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும்.

**குறள் 186:**

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்**
**திறன்தெரிந்து கூறப் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

**குறள் 187:**

**பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மை விட்டு நீங்கும்படியாகப் புறம் கூறி நண்பரையும் பிரித்து விடுவர்.

**குறள் 188:**

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றும் இயல்புடையவர், பழகாத அயலாரிடத்து என்ன செய்வாரோ?.

**குறள் 189:**

**அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்**
**புன்சொல் உரைப்பான் பொறை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவர் நேரில் இல்லாதது கண்டு பழிச்சொல் கூறுவோனுடைய உடல் பாரத்தை, இவனையும் சுமப்பதே எனக்கு அறம் என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?.

**குறள் 190:**

**ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அயலாருடைய குற்றத்தைக் காண்பது போல் தம் குற்றத்தையும் காண வல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

**அதிகாரம்:ஈகை**

**குறள் 221:**

**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது.

**குறள் 222:**

**நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது.

**குறள் 223:**

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே யுள.**

**மு.வரதராசன் விளக்கம்:**

யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடி பிறப்பு உடையவனிடம் உண்டு.

**குறள் 224:**

**இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகங் காணும் அளவு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பொருள் வேண்டும் என்ற இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் (இரத்தலைப் போலவே) இரந்து கேட்கப்படுவதும் துன்பமானது.

**குறள் 225:**

**ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்ளலாகும், அதுவும் அப் பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

**குறள் 226:**

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

**குறள் 227:**

**பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தான் பெற்ற உணவை பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

**குறள் 228:**

**ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தாம் சேர்த்து வைத்துள்ள பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்து விடும் வன் கண்மை உடையவர், பிறர்க்கு கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ.

**குறள் 229:**

**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்க்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.

**குறள் 230:**

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சாவதை விடத் துன்பமானது வேறொன்றும் இல்லை, ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாதநிலை வந்தபோது அச் சாதலும் இனியதே ஆகும்.

**அதிகாரம்: கல்வி**

**குறள் 391:**

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

**குறள் 392:**

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

**குறள் 393:**

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கண்ணுடையவர் என்றுக் கூறப்படுபவர் கற்றவரே, கல்லாதவர் முகத்தில் இரண்டுப் புண் உடையவர் ஆவார்.

**குறள் 394:**

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மகிழும் படியாகக் கூடிபழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

**குறள் 395:**

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் இழிந்தவர்

**குறள் 396:**

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

**குறள் 397:**

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.

**குறள் 398:**

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

**குறள் 399:**

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.

குறள் 400:

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

**அதிகாரம் : கல்லாமை**

குறள் 401:

**அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது.

குறள் 402:

**கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற்றற்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எண் (கற்றவரின் அவையில்) கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல், முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

குறள் 403:

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப் பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவார்.

குறள் 404:

**கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவனுடைய அறிவுடைய ஒருக்கால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**குறள் 405:**

**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவன் ஒருவன் தன்னைத்தான் மகிழ்ந்து பேசும் மதிப்பு (கற்றவரிடம்) கூடிபேசும் போது அப்பேசினால் கெடும்.

**குறள் 406:**

**உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

**குறள் 407:**

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராய வல்லவான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

**குறள் 408:**

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவனிடம் சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிகத்துன்பம் செய்வதாகும்.

**குறள் 409:**

**மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்விக் கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.

**குறள் 410:**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறிவு விளங்குதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடுக் கல்லாதவர், மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

**அதிகாரம்: கேள்வி**

**குறள் 411:**

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்து ளெல்லாந் தலை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும், அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

**குறள் 412:**

**செவுக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செவிக்கு கேள்வியாகிய உணவு இல்லாத போது (அதற்க்கு துணையாக உடலை ஒப்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

**குறள் 413:**

**செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**
**ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கற்றவரின் செவியுணவாகிய கேள்வி உடையவர் நிலத்தில் வாழ்கின்றவரே ஆயினும் அவி உணவைக் கொள்ளும் தேவரோடு ஒப்பாவார்.

**குறள் 414:**

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நூல்களைக் கற்றவில்லையாயினும், கற்றறிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும், அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல் போல் துணையாகும்.

**குறள் 415:**

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவன் ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச் சொற்கள், வழுக்கல் உடைய சேற்று நிலத்தில் ஊன்றுகோல் போல் வாழ்க்கையில் உதவும்.

**குறள் 416:**

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும், கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

**குறள் 417:**

**பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்**
**தீண்டிய கேள்வி யவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நுட்பமாக உணர்ந்து நிறைந்த கேள்வியறிவை உடையவர், (ஒரு கால் பொருள்களைத்) தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையானவற்றைச் சொல்லார்.

**குறள் 418:**

**கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கேள்வியறிவால் துளைக்கப் படாத செவிகள், (இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைக்) கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே.

**குறள் 419:**

**நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நுட்பமான பொருள்களைக் கேட்டறிந்தவர் அல்லாத மற்றவர், வணக்கமானச் சொற்களைப் பேசும் வாயினை உடையவராக முடியாது.

**குறள் 420:**

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செவியால் கேள்விச் சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன, உயிரோடு வாழ்ந்தாலும் என்ன.

**அதிகாரம்: இடனறிதல்**

**குறள் 491:**

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்அல் லது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எச் செயலையும் தொடங்கக்கூடாது, பகைவரை இகழவும் கூடாது.

**குறள் 492:**

**முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்**
**ஆக்கம் பலவுந் தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மாறுபாடு பொருந்திய வலிமை உடையவர்க்கும் அரணோடு பொருந்தி ஏற்படுகின்ற வெற்றியானது பல வகைப் பயன்களையும் கொடுக்கும்.

**குறள் 493:**

**ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக் கொண்டு பகைவரிடத்திற் சென்று தம் செயலைச் செய்தால், வலிமை இல்லாதவறும் வலிமை உடையவராக வெல்வர்.

**குறள் 494:**

**எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தக்க இடத்தை அறிந்து பொருந்தியவராய்ச் செயலைச் செய்வாராயின், அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்துவிடுவார்.

குறள் 495:

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும், ஆனால் நீரிலிருந்து விலகிவந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்றுவிடும்.

குறள் 496:

**கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
**நாவாயும் ஓடா நிலத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வலிய சக்கரங்களையுடைய பெரியத் தேர்கள் கடலில் ஓடமுடியாது, கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓடமுடியாது.

குறள் 497:

**அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

(செய்யும் வழிவகைகமைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால், அஞ்சாமை அல்லாமல் வேறு துணை வேண்டியதில்லை.

குறள் 498:

**சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்**
**ஊக்கம் அழிந்து விடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சிறிய படை உடையவனுக்குத் தக்கதாக உள்ள இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படை உடையவன் தன் ஊக்கம் அழிவான்.

குறள் 499:

**சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்**
**உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அரணாகிய நன்மையும் மற்றச் சிறப்பும் இல்லாதவராயினும் பகைவர் வாழ்கின்ற இடத்திற்குச் சென்று அவரைத் தாக்குதல் அரிது.

குறள் 500:

**காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வேல் ஏந்திய வீரரைக் கோர்த்தெடுத்த கொம்பு உடைய யானையையும், கால் ஆழும் சேற்று நில்த்தில் அகப்பட்ட போது நரிகள் கொன்றுவிடும்.

**அதிகாரம்: மடியின்மை**

குறள் 601:

**குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்**
**மாசூர மாய்ந்து கெடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவனுக்கு தன் குடியாகிய மங்காத விளக்கு, அவனுடைய சோம்பலாகிய மாசு படிய படிய ஒளி மங்கிக் கெட்டுவிடும்.

குறள் 602:

**மடியை மடியா ஒழுகல் குடியைக்**
**குடியாக வேண்டு பவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தம் குடியைச் சிறப்புடைய குடியாக விளங்குமாறு செய்ய விரும்புகின்றவர் சோம்பலைச் சோம்பலாகக் கொண்டு முயற்சியுடையவராய் நடக்க வேண்டும்.

குறள் 603:

**மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்டு நடக்கும் அறிவவில்லாதவன் பிறந்த குடி அவனுக்கு முன் அழிந்துவிடும்.

குறள் 604:

**குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றி லவர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சோம்பலில் அகப்பட்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்க்கு குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும்.

**குறள் 605:**

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

காலம் நீட்டித்தல், சோம்பல், மறதி, அளவு மீறியத் தூக்கம் ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

**குறள் 606:**

**படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நாட்டை ஆளும் தலைவருடைய உறவுத் தானே வந்து சேர்ந்தாலும், சோம்பல் உடையவர் சிறந்த பயனை அடைய முடியாது.

**குறள் 607:**

**இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சோம்பலை விரும்பி மேற்க் கொண்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர் பிறர் இடித்துக் கூறி இகழ்கின்ற சொல்லைக் கேட்கும் நிலைமை அடைவர்.

**குறள் 608:**

**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு**
**அடிமை புகுத்தி விடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சோம்பல் நல்ல குடியில் பிறந்தவனிடம் வந்து பொருந்தினால், அஃது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமையாகுமாறு செய்துவிடும்.

**குறள் 609:**

**குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**மடியாண்மை மாற்றக் கெடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவன் சோம்பலை ஆளுந் தன்மையை மாற்றிவிட்டால் அவனுடைய குடியிலும் ஆண்மையிலும் வந்தக் குற்றம் தீர்ந்து விடும்.

**குறள் 610:**

**மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவியப் பரப்பு எல்லாவற்றையும் சோம்பல் இல்லாத அரசன் ஒரு சேர அடைவான்.

**அதிகாரம்: இடுக்கணழியாமை**

**குறள் 621:**

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

துன்பம் வரும்போது (அதற்காக கலங்காமல்) நகுதல் வேண்டும், அத் துன்பத்தை எதிர்த்து வெல்லவல்லது அதைப் போன்றது வேறு இல்லை.

**குறள் 622:**

**வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வெள்ளம் போல் அளவற்றதாய் வரும் துன்பமும், அறிவுடையவன் தன் உள்ளத்தினால் அத் துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் கெடும்.

**குறள் 623:**

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

துன்பம் வந்த போது அதற்க்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவார்.

**குறள் 624:**

**மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தடைபட்ட இடங்களில் எல்லாம் (வண்டியை இழுத்துச் செல்லும்) எருதுபோல் விடாமுயற்சி உடையவன் உற்றத் துன்பமே துன்பப்படுவதாகும்.

**குறள் 625:**

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

விடாமல் மேன் மேலும் துன்பம் வந்தபோதிலும் கலங்காமலிருக்கும் ஆற்றலுடையவன் அடைந்த துன்பமே துன்பப்பட்டு போகும்.

**குறள் 626:**

**அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று**
**ஓம்புதல் தேற்றா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செல்வம் வந்த போது இதைப்பெற்றோமே என்று பற்றுக்கொண்டு காத்தறியாதவர் வறுமை வந்த போது இழந்தோமே என்று அல்லல்படுவரோ

**குறள் 627:**

**இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மேலோர், உடம்பு துன்பத்திற்கு இலக்கமானது என்று உணர்ந்து, (துன்பம் வந்த போது) கலங்குவதை ஒழுக்க நெறியாகக் கொள்ளமாட்டர்.

**குறள் 628:**

**இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

இன்பமானதை விரும்பாதவனாய்த் துன்பம் இயற்கையானது என்று தெளிந்திருப்பவன், துன்பம் வந்த போது துன்ப முறுவது இல்லை.

**குறள் 629:**

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

இன்பம் வந்திக் காலத்தில் அந்த இன்பத்தை விரும்பிப் போற்றாதவன் துன்பம் வந்த காலத்தில் அந்தத் துன்பத்தை அடைவது இல்லை.

**குறள் 630:**

**இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையுஞ் சிறப்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவன் துன்பத்தையே தனக்கு இன்பமாகக் கருதிக்கொள்வானானால் அவனுடைய பகைவரும் விரும்பத்தக்க சிறப்பு உண்டாகும்.

**அதிகாரம்: நட்பு**

**குறள் 781:**

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்பைப்போல் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன, அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன.

**குறள் 782:**

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்னீர பேதையார் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது, அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையன.

**குறள் 783:**

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.

**குறள் 784:**

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று, நண்பர் நெறிக்கடந்து செல்லும் போது முற்ப்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.

குறள் 785:

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை, ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

குறள் 786:

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு**

**மு.வரதராசன் விளக்கம்:**

முகம் மட்டும் மலரும் படியா நட்பு செய்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்.

குறள் 787:

**அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவுவந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.

குறள் 788:

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

உடைநெகிழ்ந்தவனுடைய கை, உட்னே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

குறள் 789:

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்புக்கு சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

குறள் 790:

**இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

இவர் எமக்கு இத்தன்மையானவர், யாம் இவர்க்கு இத் தன்மையுடையேம் என்று புனைந்துரைத்தாலும் நட்பு சிறப்பிழந்து விடும்.

**அதிகாரம்: சான்றாண்மை**

குறள் 981:

**கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கடமை இவை என்று அறிந்து சான்றான்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

குறள் 982:

**குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத்து உள்ளதூஉம் அன்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவறுடைய பண்புகளின் நலமே, மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

குறள் 983:

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால் ஊன்றிய தூண்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அன்பு, நாணம்,ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, என்னும் ஐந்து பண்புகளும், சால்பு என்பதைத் தாங்கியுள்ள தூண்களாகும்.

குறள் 984:

**கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது, சால்பு பிறருடையத் தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது

**குறள் 985:**

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும், அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

**குறள் 986:**

**சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சால்புக்கு உரைகல் போல் மதிப்பிடும் கருவி எது என்றால் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரிடத்திலும்தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்

**குறள் 987:**

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யா விட்டால், சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும்.

**குறள் 988:**

**இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சால்பு என்னும் வலிமை உண்டாகப் பெற்றால் ஒருவனுக்குப் பொருள் இல்லாத குறையாகிய வறுமை இழிவானது அன்று.

**குறள் 989:**

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சால்பு என்னும் தன்மைக்குக் கடல் என்று புகழப்படுகின்றவர், ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தாம் வேறுபடாமல் இருப்பர்.

**குறள் 990:**

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சான்றோரின் சால்பு நிறைந்த பண்பு குறைபடுமானால் இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய் விடும்.

**அதிகாரம்: பண்புடைமை**

**குறள் 991:**

**எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பண்பு உடையவராக வாழும் நல்வழியை, யாரிடத்திலும் எளிய செவ்வியுடன் இருப்பதால் அடைவது எளிது என்று கூறுவர்.

**குறள் 992:**

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ் விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

**குறள் 993:**

**உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்கப் பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

**குறள் 994:**

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

**குறள் 995:**

**நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும், பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்லப் பண்புகள் உள்ளன.

**குறள் 996:**

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது, அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும்.

**குறள் 997:**

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

**குறள் 998:**

**நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்**
**பண்பாற்றார் ஆதல் கடை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்பு கொள்ள முடியாதவராய்த் தீயவைச் செய்கின்றவரிடத்திலும் பண்பு உடையவராய் நடக்க முடியாமை இழிவானதாகும்.

**குறள் 999:**

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு, மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம்.

**குறள் 1000:**

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.